## IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.

## OS.No. 224/2020 C/W 163/2021

| | | |
|---|---|---|
| **Witness Rank** | : | PW1 |
| **Name of the Witness** | : | கலைச்சித்தன் |
| **Father's Name** | : | |
| **Age** | : | |
| **Occupation** | : | |
| **Address** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 16th day of February, 2026.

O.S.No.163/2021 வழக்கின் வாதி தரப்பில் குறுக்குவிசாரணை :-

அபிராமி மற்றும் முத்துவேல் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு தான் நான் O.S.No 224/2020 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அபிராமி மற்றும் முத்துவேலுக்கு பிறந்த ஒரே மகன் தான் சாம்பசிவம் என்றால் சரிதான். சாம்பசிவத்திற்கு 2 மனைவி என்றால் சரியல்ல. என் பாட்டி மங்காயி மட்டும் தான் மனைவி ஆகும். சாம்பசிவத்தின் 2வது மனைவி பெயர் பவுனம்பாள் என்றால் எனக்கு தெரியாது. மங்காயிக்கு குப்புசாமி, குமாரசாமி மற்றும் அம்புஜம் வாரிசுகள் என்றால் சரிதான். 2வது மனைவி பவுனம்பாளுக்கு லட்சுமி, அழகப்பன், முத்துலட்சுமி என பிள்ளைகள் என்றால் எனக்கு தெரியாது. சாம்பசிவத்தின் 2வது மனைவி மூலமான வாரிசுகள் என்ற அடிப்படையில் லட்சுமி

மற்றும் முத்துலட்சுமி O.S.No.163/2021 வழ்கதை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நாங்கள் எப்படி சாம்பசிவத்தின் வாரிசுதாரர்கள் என்று O.S.No.224/2020 வழக்கை தாக்கல் செய்துள்ளோமோ அதேபோல் தான் அவர்களும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். O.S.No.224/2020 வழக்கில் உள்ள 1 முதல் 11 பிரதிவாதிகள் குப்புசாமியின் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு தாவா சொத்தில் பாகம் உள்ளது என்றால் சரிதான். அவர்களது பாகத்தை விற்பனை செய்து விட்டார்கள். O.S.No.163/2021 வழக்கில் உள்ள 1 முதல் 17 பிரதிவாதிகளான சாம்பசிவத்தின் 2 மனைவிகளின் வாரிசுகளுக்கு பாகம் உள்ளது என்றால் சரியல்ல. அழகப்பன் மற்றும் அவரது மகன் அசோக் 22.03.2002 அன்று பாக உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான். (**சாட்சி தரப்பில் IA 42/2021 என்ற மனுவில் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அது வாதசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) 19.09.2019-ல் வில்லங்கம் எடுத்து பார்த்த போது தான் தாவா சொத்து விற்பனை செய்துள்ள விவரம் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். (**சாட்சி தரப்பில் IA 42/2021 என்ற மனுவில் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அது வாதசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). குப்புசாமி, குமாரசாமி, அழகப்பர் மற்றும் நான் தாவா சொத்தை கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் இளங்கோ ஒரு பகுதியில் கோழிக்கறிக்கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். நான் உழுந்து பயிர் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அது அல்லாமல் உணவகம் வைத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அபிராமி ,

முத்துவேல் வாரிசுகளுக்கு பாகம் உள்ளது என்றால் சரிதான்.

**( பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை வேண்டுக்கோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது)**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*